# உங்கள் குடும்பம் இணையத்தில் பாதுகாப்பாக இருக்க உதவுதல்

**குழந்தைகள் இணையத்தில் கற்றுக்கொள்ள, தேடியறிய, விளையாட மற்றும் நண்பர்களை உருவாக்க முடியும். ஆனால் இதில் ஆபத்துக்களும் இருக்கலாம்.**

உங்கள் குழந்தை நிலைகுலையச் செய்யும் உள்ளடக்கத்தைத் தற்செயலாகப் பார்க்கவோ, அறியாதவர்களால் தொடர்புகொள்ளப்படவோ அல்லது அவர்கள் அடாவடியாக நடந்துகொள்ளவோ செய்யலாம். வெளியே நேரத்தைச் செலவிடுவது போன்ற முக்கிய விசயங்களை அவர்கள் தவறவிடக்கூடும்.

உங்கள் குழந்தை இணையத்தில் பத்திரமாயிருக்க உதவுவதில் நீங்கள் செய்யக்கூடிய சில விசயங்கள் இதோ:

## ஒரு குடும்பமாக இருந்து இணையப் பாதுகாப்பு குறித்துப் பேசுங்கள்

இணையத்தில் உங்கள் குழந்தை பயப்படும்படியோ அல்லது நிலைகுலையச் செய்யும்படியோ ஏதாவது நடந்தால் அவர்கள் எப்போதும் உங்களிடம் வரலாம் என்பதை அறியச் செய்யுங்கள்.

உங்கள் குழந்தையிடம் அவர்கள் பயன்படுத்தும் விளையாட்டுகள் மற்றும் செயலிகளைக் காட்டும்படி நீங்கள் கேட்கலாம். eSafety-ன் உரையாடல் துவக்கிகளைப் பயன்படுத்துவது நீங்கள் தொடங்குவதற்கு உதவும்.

## ஒன்றாகச் சேர்ந்து குடும்ப விதிகளை அமையுங்கள்

ஒரு குடும்பமாக, இணையத்தில் அனைவரும் பத்திரமாக இருக்க உதவக்கூடிய சில எளிய விதிகளைத் தேர்ந்தெடுங்கள். சாதனங்களை எங்கு பயன்படுத்தலாம், எந்த விளையாட்டுகள் மற்றும் செயலிகளை உங்கள் குழந்தைகள் பயன்படுத்தலாம், எவ்வளவு நேரம் அவர்கள் இணையத்தில் செலவிடலாம் போன்ற விசயங்களை இதில் சேர்க்கலாம். பெரும்பாலான சாதனங்களிலும் செயலிகளிலும் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் வரம்புகளை அமைக்கும் அம்சங்கள் உண்டு. பெற்றோர் கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்புகள் குறித்து மேலும் அறிந்துகொள்ள இந்தக் காணொளியைப் பாருங்கள்.

## எங்கு உதவி பெறுவது என்று தெரிந்துகொள்ளுங்கள்

ஓர் இணையப் பிரச்சினைக்கு உங்களுக்கு உதவி தேவைப்படும் நிலையில் என்ன செய்வது என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், நீங்கள் நம்பக்கூடிய ஒரு நண்பர் அல்லது உங்கள் குழந்தையின் பள்ளியிலுள்ள ஓர் ஆசிரியர் போன்ற ஒருவரிடம் அது குறித்துப் பேசுங்கள். குழந்தை வளர்ப்பு சவால்களில் உதவிக்கு பெற்றோர் உதவி எண்ணை அழைத்து (Parentline) அவர்களுடன் நீங்கள் பேசலாம். eSafety-ன் ஆணையர் (eSafety) இணையத்தில் அனைத்துக் குடும்பங்களும் பத்திரமாக இருக்க உதவுகிறார். eSafety இணையதளம் இணையத்தை தவறாகப் பயன்படுத்துவதைப் புகாரளிப்பது குறித்தும் இணையத்தில் பத்திரமாக இருப்பது குறித்தும் கூடுதல் தகவல்களைக் கொண்டுள்ளது.



உங்கள் குடும்பத்தை இணையத்தில் பாதுகாப்பாக வைத்திருப்பது குறித்த கூடுதல் தகவல்களுக்கு, எங்கள் இணையதளத்தில் eSafety Parents (இணையப் பாதுகாப்பு பெற்றோர்) என்று தேடுங்கள்.